முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் பரத்துவாசர் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

01.10.2018, திங்கட்கிழமை

1. **கலியுக இடர் வெல்ல வந்த**
**கந்தனே ஞானமகா சித்தனே**
**அழியாமை வரம் அருளி நிற்கும்**
**ஆறுமுக அரங்கமகா தேசிகனே**

2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் ஒளி சூட்சும நூலை
ஆசிபட **விளம்பி தரிவை திங்கள்**
**அறிவிக்க மூவை திகதி சோமவாரம்**
**(விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 15ம் நாள் 01.10.2018, திங்கட்கிழமை)**

3. வாரமதில் பரத்துவாசர் யானும்
வழங்குவேன் உலகோர் நலம் பெற
பாரதமே ஞானிகள் பலமுற்ற
பண்புள்ள தரும பூமியாக மாற

4. மாறவே மாதவசி சக்தியாக
மண்ணுலகே அன்னதானமதும்
அறமாக பெருக்கம் கண்டு
ஆறுமுகன் வழிபாடு வடிவமாக

5. ஆகவே திருவிளக்கு பூசையாக
அன்னதான சேவையாக வளர
யுகம் காக்க வேண்டியே
உடன் மக்களே அரங்கன் வழிக்கு வாரீர்

6. வாரீர் அரங்கன் உபதேசமேற்று
வல்லமைபட ஏற்று தொடர்ந்து
தாரீர் பொருளுதவி தன்னை
தருமவழி வழங்கி ஆசி பெற

7. ஆசி பெற அரங்கன் சக்தி
அறிந்து அணுகி தொடர
வாசி வென்ற எங்கள் அரங்கனை
வணங்கிட மும்மலக் குற்றம் விலகும்

8. விலகியே தீவழி செல்லா
வினைவழியும் அழுந்தாமல்
ஞாலமதில் உயர்நிலை பெறும்
நற்பண்பு குணநலம் பெருகி

9. பெருகி சாத்வீகம் சமத்துவமும்
பேராசை வெல்லும் பக்குவமும்
தருமநெறியும் தயவு சிந்தையுமாக
தன்னார்வ சக்தி வளர்ந்து

10. வளர்ந்து அரங்கன் சீடர் எனும்
வலுவான அடையாளம் கூட்ட
தளர்வு ஆக்கை நலிவு இல்லா
தகுதி திடம் சிறப்பறிவு கூடி

11. கூடியே ஞானிகள் துணைபட
குடில் தொண்டர்கள் அரங்கன் துணை
தேடியே எல்லா மக்களுமே
தெய்வீகம்பட சித்திகள் பெறுவர் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் பரத்துவாசர் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

கலியுகத்தின் துன்பங்களை வெல்ல வந்த கந்தனே, ஞான மகா சித்தனே, அழியாமை எனும் மரணமிலாப் பெருவாழ்வு வரத்தினை அருளி நிற்கின்ற ஆறுமுக அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 15ம் நாள் 01.10.2018, திங்கட்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே பரத்துவாசர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் பரத்துவாசர்.

வளம்மிக்க இந்திய தேசம் முழுதும் ஞானிகள் பலம் பெற்று பண்புள்ள தரும பூமியாக மாறிட வேண்டியே முருகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்த மகா தவசி ஆறுமுக அரங்கனின் சக்தியாக இவ்வுலகம் முழுதும் வெளிப்படுகின்ற அன்னதான சக்தியை உலகமெங்கும் அறத்தோடு செய்து புண்ணியபலத்தினை பெருக்கி உலகினை தருமஉலகமாக ஆக்குவதோடு முருகப்பெருமானின் வடிவமாக ஜோதி வடிவமாக வணங்கும் திருவிளக்கு பூஜைகளாக ஆக்கி பூஜைகளோடு அன்னதான சேவைகளை செய்து பூஜை பலனும், தானதருமப் பலனும் உலகில் பெருகி உலகம் பெருமாற்றம் அடைந்திடவே உலக மக்களே உடன் விரைந்து வாரீர் ஆறுமுக அரங்கன் வாழும் ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலிற்கு.

இந்த யுகத்தை காக்க வேண்டியே வாரீர் உலக மக்களே ஆறுமுக அரங்கன் கூறும் தூய ஞான வழிக்கு உடன் விரைந்து வாரீர்.

ஆறுமுக அரங்கமகா தேசிகனார் கூறும் உபதேச வழிக்கு வந்து அரங்கன் உபதேசத்தை ஏற்று நடந்து வல்லமையுடன் தொடர்ந்து கடைப்பிடித்திட வேண்டும். ஆறுமுக அரங்கன் ஆற்றும் தானதருமப் பணிகளுக்கு தாராளமாய் பொருளுதவிகளைத் தருவதுடன் தருமவழியில் சென்று தினம்தினம் மறவாமல் பூஜைகள் செய்து வர வேண்டும்.

உலக மக்களே அரங்கனிடத்து ஆசி பெற, அவரவரும் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் சக்தியை அறிந்து தெளிந்து அணுகி தொடர்ந்திட வேண்டுமப்பா, வாசியை வென்றிட்ட எங்கள் ஆறுமுக அரங்கமகா தேசிகன் திருவடி பணிந்து வணங்கி வர, அவரவரைப் பற்றிய மும்மலக்குற்றம் விலகிடுமப்பா.

மும்மலக்குற்றம் விலகி அவரெல்லாம் தீய வழியில் செல்லவிடாமல் வினை வழியும் அழுந்தாமல் இவ்வுலகினில் உயர்வான நிலையை அடைந்து நற்பண்புகளும் குணநலன்களும் பெருகி சாத்வீகமாக சமத்துவமாக நடந்து பேராசையை வெல்லும் பக்குவமும் தருமநெறியும் தயவு சிந்தையும் வளர்வதோடு தன்னார்வ தொண்டுகளும் வளர்ந்து தன்னார்வ சக்தி பெருகி அரங்கனின் சீடர் எனும் வலுவான அடையாளம் உண்டாகும்.

அரங்கனின் சீடன் எனும் வலுவுமிக்க அடையாளம்தனை அடைந்து உடல் பலமுடன் ஆரோக்கியத்துடன் உடல் நலிவுகள் இல்லாது, எல்லா மக்களும் குருவருள் திருவருள் துணையுடன் தெய்வீகம்பட, தெய்வத்தின் அருளும் கூடி நிற்க, சித்திகளை சீடர்களெல்லாம் பெற்று சித்தி அடைந்து சிறப்பு பெறுவார்கள் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் பரத்துவாசர்.

–சுபம்–